**செய்தி வெளியீடு எண்:233** **நாள் :23.05.2014**

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழகமுதலமைச்சர் அம்மா** அவர்களின் அறிவுரைகளுக்கிணங்க, **மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.M.C. சம்பத்** அவர்கள் 23–05–2014 அன்று வணிகவரித்துறை அலுவலர்களின் செயல்பாடுகளை சென்னையில் ஆய்வு செய்தார்கள். ஆய்வின்போது **திரு. S.K. பிரபாகர், இ.ஆ.ப., முதன்மை செயலர், வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை மற்றும் திரு.K. இராஜாராமன் இ.ஆ.ப., முதன்மை செயலர்/வணிக வரி ஆணையர்** ஆகியோர் உடன் இருந்தனர். ஆய்வுக் கூட்டத்தில் தமிழ் நாட்டின் அனைத்து கோட்ட நிர்வாக மற்றும் செயலாக்கப் பிரிவு இணை ஆணையர்கள் மற்றும் தலைமையக கூடுதல் ஆணையர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வின் போது, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, 2013–2014 நிதியாண்டில் ரூபாய் 50,599.58 கோடிகள் (கூடுதல் IMFL வரிவருவாய் நீங்கலாக) மொத்த வரியாக வசூலிக்கப்பட்டது எனவும், இவ்வரி 2012–13ல் வசூலான ரூபாய் 47,884.25 கோடிகளுடன் ஒப்பிடும்போது 5.67% வளர்ச்சி விகிதத்தை காண்பிக்கிறது எனவும் தெரிவிக்கப்பட்டது. மேலும், நடப்பு நிதியாண்டு (2014–2015) ஏப்ரல் மாதத்தில் ரூபாய் 4,092.48 கோடிகள் மொத்த வரியாக வசூலிக்கப்பட்டுள்ளது எனவும், இவ்வரி கடந்த 2013–14ல் ஏப்ரல் மாதத்தில் வசூலான ரூபாய் 3707.17 கோடிகளுடன் ஒப்பிடும்போது 10.39% வளர்ச்சி விகிதத்தை காண்பிக்கிறது எனவும் சென்ற ஆண்டு இதே ஏப்ரல் மாதத்தில் (–)2.87 % வளர்ச்சி மட்டுமே இருந்தது எனவும் குறிப்பிடப்பட்டது.

மேலும், 2013–2014 நிதியாண்டில் நமுனா கூர்ந்தாய்வின் மூலம் ரூபாய் 184.48 கோடிகள் வணிகவரி வருவாயாக வசூலிக்கப்பட்டது என **மாண்புமிகு அமைச்சர்** அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், 2013–2014 நிதியாண்டில் பழைய வரி நிலுவை ரூபாய் 158.92 கோடிகள் வசூல் செய்யப்பட்டுள்ளது எனவும் நடப்பு வரி நிலுவை ரூபாய் 523.54 கோடிகள் வசூல் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. 2013–2014 நிதியாண்டில் செயலாக்கப் பிரிவில் ரூபாய் 91.93 கோடிகள் வசூல் செய்யப்பட்டுள்ளது எனவும் ரூபாய் 4,179.38 கோடிகளுக்கு பிரேரணைகள் உருவாக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டது. தெரு தணிக்கையில், 72,786 போலி வணிகர்கள் அறியப்பட்டு பதிவுகள் இரத்து செய்யப்பட்டு, 3784 பதிவு பெறாத வணிகர்கள் பதிவு செய்ய அறியப்பட்டுள்ளனர். உணவு எண்ணெய் போக்குவரத்துக்கான கணிணி நுழைவுச் சீட்டு 2013ஆம் ஆண்டு நவம்பர் முதல் தேதி அறிமுகப்படுத்தப்பட்டு நவம்பர் 2013 –ல் ரூபாய் 12.90 கோடிகளாக இருந்து உயர்ந்து, மார்ச் 2014 வரை வருவாய் ரூபாய் 19.70 கோடிகளாக உயர்ந்துள்ளது. இதுபற்றி **மாண்புமிகு அமைச்சர்** அவர்கள் குறிப்பிடும்போது, போலியான வணிகர்களைக் கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது எவ்வளவு முக்கியமோ, அதைப்போன்றே நல்ல நடத்தையுடைய வணிகர்களுக்கு துறை மூலம் உரிய உதவிகள் காலதாமதமின்றி செய்யப்படுவதும் முக்கியம். அதை துறை அதிகாரிகள் உறுதி செய்து துறையின் செயல்பாட்டுக்கு நற்பெயர் வாங்கித்தர முழு மனதுடன் பணியாற்றவேண்டும் எனத் தெரிவித்தார்.

நவம்பர் 2012 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட இணைய வசதி கொண்ட அறிவிப்புப் படிவங்கள் பிப்ரவரி 13ஆம் தேதி முதல் நடப்பு காலத்திற்கு மட்டுமின்றி முந்தைய பரிமாற்றங்களும் மேற்கொள்ளும் வண்ணம் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது, ஒரு நல்ல முன்னேற்றம் என பாராட்டப்பட்டது.

2014 ஆண்டு ஏப்ரல் முதல் தேதி முதல் உருவாக்கப்பட்டுள்ள மாவட்ட அளவிலான வணிக நுண்ணறிவுப் பிரிவு (BIU), இதுவரை 48 விசாரிப்பு கோப்புகளில் ரூபாய் 187.10 கோடி வரிவருவாய் வர வகை செய்யப்பட்டுள்ளது.

கணிணி ஆளுமைமுறையின் ஆதரவில் முழுமையான தீர்வுத் திட்டத்தின் வெள்ளோட்டம் சூலை 2014 அறிமுகப்படுத்தப்பட உள்ளது. அதன் பிறகு துறையின் செயல்பாடு இன்னும் துரிதப்படுத்தப்படவேண்டும் என **மாண்புமிகு அமைச்சர்** அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

வணிகவரித்துறையின் இரு பிரிவுகளும், போலி வணிகம் செய்பவர்கள் மற்றும் தவறான உள்ளீட்டு வரியினால் பயனடைந்த வணிகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தும், அரசு வருவாயினை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கவும் அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

மேலும், எதிர்மறை வளர்ச்சி மற்றும் குறைவான வளர்ச்சி கண்டறியப்படும் வணிக இனங்களிலும், அதிக உள்ளீட்டு வரியினை கோரியுள்ள மற்றும் முன்கொணர்ந்த இனங்களிலும், கூர்ந்தாய்வு செய்து காரணங்களை கண்டறிந்து, உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. வணிகவரி கோட்ட அளவில் இணை ஆணையர்கள், துணை ஆணையர்களும் வரி நிலுவைகளை வசூலிக்கவும், மாதாந்திர நமுனாக்களை விடுதலின்றி வசூலிக்கவும், வரி வழக்குகளில் துரித நடவடிக்கை மேற்கொண்டு, நிலுவையிலுள்ள வரிவருவாயை வசூலிக்கவும் அறிவுரை வழங்கப்பட்டது. அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவாய் இலக்கினை அடையவேண்டும் என கேட்டுக் கொண்டு நிறைவாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில் முந்தைய ஆய்வுக் கூட்டங்களில் எல்லாம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருவது போல, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அனைத்து சிறப்பு திட்டங்களுக்கும் எந்தவிதத் தொய்வும் ஏற்படா வண்ணம், நமது துறையின் அனைத்து அதிகாரிகளும் முழு மனதுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் பணியாற்றி, துறைக்கு சிறந்த செயல்பாட்டையும், **மாண்புமிகு முதல்வர் அம்மா** அவர்களின் அரசுக்கு பெருமை சேர்க்கும் வகையில் இருக்க வேண்டும் என அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொண்டார்.

++++++

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**